# இலங்கைக் கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்களும், தமிழ்த் தாலாட்டுப் பாடல்களும்

**Kirubasahakthy Karuna,** *Senior Lecturer, Dept, of Music, Ramanathan Academy of Fine Arts, University of Jaffna.*

**அறிமுகம்:**
இசை அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்க்கையிலும் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. இவ் இசை அனைத்து விழாக்களிலும், இறைவழிபாட்டிலும், விளையாட்டு மற்றும் அரசியல் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளிலும் தவிர்க்கமுடியாத ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. பெரும்பாலான மக்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தை இசையை இரசிப்பதற்கு தினம்தோறும் செலவிடுகின்றனர்.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைப் படிகளிலும் இசை இணைந்தள்ளது. ஒரு குழந்தை பிறந்தவுடன் தாலாட்டில் ஆரம்பிக்கும் இசை, அவன் இறந்தபின் ஒப்பாரிப் பாடலின் இசையில் முடியும்வரை ஒவ்வொரு பருவத்திலும் மனிதனை ஆட்கொள்கின்றது. இதற்கு முஸ்லிம் சமூகமும் விதிவிலக்கானதல்ல. மேற்றியவற்றுள் தாலாட்டுப் பாடல்கள் கிராமத்து முஸ்லிம்களிடையே எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தரவுகள்:**
இக்கட்டுரைக்கு ஆதாரமாகச் சில நூல்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சோந்த முஸ்லிம் கிராமங்களைச் சோந்த தாய்மார்களின் தாலாட்டுப் பாடல்களிலிருந்தே தரவுகள் பெற்ப்பட்டுள்ளன. இலங்கை முஸ்லிம்களின் தாலாட்டுப்பாடல்கள் எஸ்.முத்துமீரான் அவர்களுடைய இலங்கைக் கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப்பாடல்கள் என்னும் நூலில் இருந்து கொடுக்கப்பட்டுள்ளன.

**தாலாட்டின் நோக்கம்:**
குழந்தை பிறந்தவுடன் செய்யக்கூடிய முக்கிய தொழில் அழுகை. இவ்வாறு அழும் குழந்தையை தாயானவள் சமாதானப்படுத்துவதற்கு பாடுவதே தாலாட்டு. தாயினுடைய வாயில் இருந்து வரக்கூடிய குறிக்கப்பட்ட ஒலி வடிவங்கள் அந்தக் குழந்தையின் செவியில் புகுந்து குழந்தையை அமைதியடையச் செய்கின்றன. அந்த வகையில் இசை மனிதனுடைய குழந்தைப் பருவத்தில் தாலாட்டுப் பாடல்கள் ஊடாக முதல் தாக்கத்தைச் செலுத்துகிறது.

**தாலாட்டு விளக்கம்:**
தாயின் நாவசைவில் தாலாட்டு பிறக்கிறது. தாலாட்டு என்ற சொல்லைத் தால் + ஆட்டு எனப் பிரிக்கலாம். தால் என்றால் நாக்கு என்றும், நாவை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு என்றும் பெயர் பெற்றிருக்கிறது. தாலாட்டு எனும் சொல் ராராட்டு, தாலாட்டு, தாலேலோ, ஓராட்டு, ரோராட்டு, தொட்டில்பாட்டு, ஓலாட்டு, திருத்தாலாட்டு எனும் பல்வேறு பெயர்களால் இன்றைய உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் வழங்கப்பட்டு வருகிறது. தமிழில் தாலாட்டு என்று கூறுவதுபோல், மலையாளத்தில் “தாராட்டு” என்றும் தெலுங்கில் “ஊஞ்சோதி” என்றும் கன்னடத்தில் “ஜோகுல” என்றும் அழைக்கப்படுகிறது.

**தாலாட்டின் பொருள்:**
தாலாட்டின் பொருள் பொதுவாக குழந்தையைப் பற்றியதாகவே இருக்கும். குழந்தைச் செல்வத்திற்காக ஏங்கிச்செய்த தானதருமங்கள் குழந்தைக்காகத் தாய் அடைந்த துன்ப துயரங்கள் பிரார்த்தனைகள், உறவினர்கள் செய்த உதவிகள், குழந்தையைப் பற்றிய வர்ணனைகள், குழந்தைக்குரிய கருவிகள் ஆகியவை தாலாட்டுப் பொருளாக அமையும்.

**முஸ்லிம்களின் நாட்டார் பாடல் வகைகள்:**

இலங்கையைப் பொறுத்த வரையில் கிழக்கு மாகாண மக்கள் நாட்டார் பாடல்களுக்கு முதன்மையான இடத்தைக் கொடுத்துள்ளனர். இப்பாடல்கள் அந்த மக்களின் சாதாரண வாழ்வோடும் எண்ணங்களோடும் பண்பாட்டு வடிவங்களோடும் பின்னிப் பிணைந்துள்ளன. இவற்றுள் ஏராளமான பாடல்கள் எழுத்து வடிவில் நாட்டார் இயல் ஆய்வாளர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களின் நாட்டார் பாடல் வகைகளை தாலாட்டு, விளையாட்டு, வினாவிடை, நகைச்சுவை, ஊர்வரலாறு, கந்தூரி, தர்ஹா, திருமணம், விவசாயம் எனப் பல கூறுகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் தாலாட்டு, வாய்மொழிப் பாரம்பரியத்தின் வழிவருவது என்றே கொள்ளவேண்டும். நாட்டார் (Folk) எனும் எண்ணக்கரு, செந்நெறி சார்ந்தவற்றுக்கு எதிர்நிலையாகக் கொள்ளப்பட்டாலும், தாலாட்டு இரு மரபுகளுக்கும் உரியதாக இருப்பது, அனைத்துப் பண்பாடுகளிலும் தாலாட்டுக்கு கொடுக்கப்பட்டுள்ள சிறப்பைக் குறிக்கிறது.

**தாலாட்டும் முஸ்லிம் தாய்மார்களும்**

தாலாட்டுப் பாடித் தங்கள் குழந்தைகளைத் தூங்க வைப்பதில் எல்லாத் தாய்மார்களையும் போலவே முஸ்லிம் தாய்மார்களும், தாலாட்டுப் பாடுகின்ற திறமையும் சிறப்பும் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இவர்களால் பாடப்பட்டுள்ள தாலாட்டுப் பாடல்கள் இறைவனைப் பற்றியும், இறைநேசர்கள், ஆன்மீக உணர்வுகள் பற்றியும் உடன்பிறப்புக்கள், வீட்டுச் சிறப்புக்கள், வட்டார மரபுகள், சமயச் சடங்குகள், இயற்கைச் சூழல் பற்றியும் எடுத்தியம்புகின்றன. முஸ்லிம் தாய்மார்களுக்கு ஏனைய மதங்களை விட,சில கட்டுபாடுகள் இருந்தாலும், தாலாட்டுப் பாடல்களில் காணப்படும் தூய்மையான பாசமும், அன்பும் இவர்களுடைய பாடல்களில் குறைவின்றிக் காணப்படுவது பாராட்டுதற்குரியது.

**முடிவுரை:**

1. கிராமத்து முஸ்லிம் மக்களின் இலக்கியங்களான பாடல்கள், யாவும் பேச்சு மொழியிலேயே காணப்படுகின்றன. மிகச் சிறந்த மொழி நடையிலே இயல்பு வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்த சிறப்பு முஸ்லிம் தாலாட்டுப் பாடல்களுக்கு உண்டு. தமிழ் தாலாட்டுப் பாடல்களுக்கும், முஸ்லிம் தாலாட்டுப் பாடல்களுக்கும் நிறைய ஒற்றுமையும், தொடர்புகளும் உண்டு. முஸ்லிம் பாடல்களில் அரபு, உருது மொழிக் கலப்புக்கள் இருப்பது தனிச்சிறப்பு.

2. இத்தாலாட்டுப் பாடல்களை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சிப் பிரிவு மூலமும், தொலைக்காட்சி நிகழ்ச்சிப் பிரிவு மூலமும் ஒலிபரப்பிப் பாதுகாக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும். உலகத்தவர் அனைவருக்கும் பொதுவான தாலாட்டும் தாய்மையும், உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்பட வேண்டியது.

3. ஒரு குழந்தையின் முதலாவது கல்விக்கூடம் தாயின் மடியாகும். இந்தத் தாய் சிறந்த கல்வியறிவு உள்ளவளாக இருத்தல் வேண்டும். கல்வித் தேடல் பெண்களுக்குப் பொருத்தமற்றது, கடமையற்றது எனும் தவறான சிந்தனைப் போக்குப் பொதுவாக நிலவி வருகின்றது. இது இஸ்லாத்திற்கு முற்றிலும் விரோதமானது. இஸ்லாம், பெண்களுக்குரிய அனைத்து சமய – சமூக உரிமைகளையும் வழங்கியுள்ளது. கல்வி பெறுவதைப் பெண்களுக்கான உரிமையாக மட்டுமன்றிக் கடமையாகவும் பிரகடனப்படுத்தி உள்ளமை இஸ்லாத்தின் முக்கிய பண்பாகக் குறிப்பிடத்தக்கது. நபி அவர்கள் குறிப்பிட்டார்கள்: "அறிவைத் தேடிப் பெறுவது முஸ்லிமான ஆண், பெண் இருபாலார் மீதும் கடமையாகும்" (முஸ்லிம்)

ஆகவே முஸ்லிம்களின் நாட்டார் கலையிலும், செவ்வியல் இசைமரபிலும் முஸ்லிம் பெண்களுக்கும், ஏழைத் தாய்மார்களுக்கும் குறிப்பிட்ட சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். குறிப்பாக அவ்வக் காலங்களில் வாழும் முஸ்லிம் பெண்களும், அவர்களுடைய கலைப் பொக்கிஷங்களும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.